# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 2nd Term Examination - 2021

FWC

| தமிழ் Tamil | Three Hours / Gr -12 (2022) | 72 | T | I,II |
|---|---|---|---|---|

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள இரு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

**01. பின்வரும் செய்யுளை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதி மயக்குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழியல்கலும்
தயங்கு திரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாவூங்கே.

1) இச்செய்யுளின் திணை, துறை என்பவற்றைத் தருக.
2) இச்செய்யுளின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக?
3) இச்செய்யுளில் வெளிப்படும் சங்ககால அகத்திணைப் பண்புகளை இனங்காண்க?
4) இச்செய்யுளில் இடம்பெறும் இரு அணிகளை இனங்கண்டு விளக்குக?

(4+6+5+5=20 புள்ளிகள்)

**02. ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1) சந்தியக்கர எழுத்துக்களாக அமைவன.
1) அ, இ 2) ஐ, ஔ 3) அ, உ 4) எ, யா 5) உ, எ ( )

2) நன்னூல் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை.
1) 369 2) 247 3) 126 4) 216 5) 329 ( )

3) கீழ்வருவனவற்றுள் உயிர்த்தொடரக் குற்றியலுகரமாக அமைவது.
1) நாடு 2) வரகு 3) சங்கு 4) கொக்கு 5) சார்பு ( )

4) மகரக் குறுக்கத்தின் மாத்திரையின் அளவு.
1) $\frac{1}{2}$ 2) $\frac{1}{4}$ 3) $1$ 4) $1\frac{1}{2}$ 5) $2$ ( )

5) தற்காலத்தில் மொழிக்கு இறுதியில் வராத உயிர் எழுத்துக்கள்

1) எ, ஒ. ஔ 2) ஏ, ஓ, ஔ 3) அ, இ, உ
4) ஐ, இ, ஔ 5) ஒ, ஓ, எ ( )

6) வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மாத்திரம் அமையவல்ல எழுத்துக்கள்

1) க், ச் 2) ர், ழ் 3) த், ப் 4) ஞ், ண் 5) ள், ர் ( )

7) கீழ்வருவனவற்றுள் இடைப்பகாப்பதத்திற்கு உதாரணமாக அமைவது.

1) சால 2) உண் 3) மற்று 4) தவ 5) நீர் ( )

8) பின்வருவனவற்றுள் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலையாக அமையாதது

1) இ 2) த் 3) ட் 4) வ் 5) ற்

9) சார்பெழுத்து வகைக்குள் உள்ளடங்காதது,

1) உயிர்மெய் 2) உயிர் எழுத்து 3) ஆய்தம்
4) குற்றுயலுகரம் 5) உயிரளபெடை ( )

10) மூன்று மெய்கள் மயங்கி வருவதற்கு உதாரணமாக அமைவது.

1) காந்தள் 2) வண்டு 3) நற்பெயர்
4) வேய்ங்குழல் 5) தோல்வி ( )

*(2 x 10 = 20 புள்ளிகள்)*

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.**

1) திரிபடைந்து வரும் கொரோனா வைரஸ்களும் சவால்மிகு மனித வாழ்வும்.

2) நிகழ்நிலைக் கற்றலும் இன்றைய மாணவரும்.

3) அறிவியலும் ஆன்மீகமும் இணைந்ததே நல்வாழ்வு.

4) போதையின் பாதையில் இன்றைய இளைஞர்.

5) ஒழுக்கத்தினால் எய்துவர் மேன்மை.

*(20 புள்ளிகள்)*

## பகுதி II

04. குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

அ) குற்றங்களாகக் கருதப்படுவன

ஆ) குற்றங் கடியும் வழிகள்

இ) ஈகையற்ற செல்வத்தின் குற்றம்

ஈ) உவமை அணிக் கையாட்சி

*(20 புள்ளிகள்)*

05. கம்பராமாயணம் கங்கை காண்படலம் *1 – 23* பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விடையளிக்குக.

அ) கங்கைக் கரையை அடைந்த பரதனது படைச் சிறப்புக்கள்.

ஆ) பரதனது படைகண்டு குகன் அடைந்த சீற்றம்.

இ) குகனின் வீரவார்த்தைகள் வெளிப்பட்ட விதம்

*(20 புள்ளிகள்)*

06. அ) சங்கமருவிய காலத்தில் எழுந்த அற இலக்கியங்களை எழுதுக.

ஆ) இக்காலத்தில் அறநூல்கள் பெரிதும் தோற்றம் பெற்றமைக்கான பின்னணியைக் குறிப்பிடுக.

இ) பக்தி நெறிசார் இலக்கியங்களின் தோற்றமும் காரைக்கால் அம்மையாரும்.

*(20 புள்ளிகள்)*

07. தேம்பவாணி காட்சிப்படலத்தில் நீர்கற்ற பாடல்களை ஆதாரமாகக் கொண்டு கீழ்வருவன வற்றிற்கு விடையளிக்குக.

அ) இயேசு நாதரைக் கண்ட இடையர்கள் அடைந்த மகிழ்ச்சியும் அதன் வெளிப்பாடுகளும்.

ஆ) சாந்தியின் ஐய வினாக்கள்

இ) மரியாளின் பதிலுரைகள்

*(20 புள்ளிகள்)*

08. அ) ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திற்கு முற்பட்ட ஈழத்து இலக்கிய வரலாற்றுப் போக்கினை அறிந்து கொள்ள முடியாமைக்கான காரணங்கள்.

ஆ) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களை எழுதுக.

இ) இக்கால வைத்திய நூல்கள் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

*(20 புள்ளிகள்)*